Registered as a Newspaper     பக்கங்கள் 6     விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5   திருவள்ளுவர் ஆண்டு 2025   சித்திரை 6   (19.4.94)   செவ்வாய்க்கிழமை   ஓசை 60

## யாழ். மாவட்டத்தில் பெண்களின் பிறப்பு வீதம் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 18491 பேர் பிறந்துள்ளதாகவும் 6019 பேர் மரணமடைந்துள்ளதாகவும் யாழ். செயலக பதிவுகளிலிருந்து தெரியவந்துள்ளது. பெண்களின் பிறப்பு வீதம் இவ் ஆண்டு ஐம்பத்துநான்கு சதவீதம் எனவும் பெண்களின் இறப்பு வீதம் நாற்பத்தி ஒன்பது சதவீதம் எனவும் அறியக்கிடைக்கிறது. கடந்த ஆண்டு முழுமையாக மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இப் புள்ளி விபரங்கள் பெறப்பட்டுள்ளன. இதேவேளை பிறந்த குழந்தைகளுக்கான போசாக்கின்மை வீதம் அதிகரித்துள்ளதாகவும் அறியவருகிறது. கடந்த வருடம் இது அறுபத்திமூன்று சதவீதமாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## எல்லாளன் படை மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள் மீண்டும் ''எல்லாளன்படை'' என்னும் அமைப்பினால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த எச்சரிக்கை அடங்கிய பிரசுரங்கள் பெரும்பாலும் எல்லா சுற்றுலா மையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து சுற்றுலா மையங்களில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பதுங்கியிருந்து தாக்குவதே படையினர் புதிய யுத்தியாம்

### கொழும்புத் தினசரி கூறுகிறது

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பதவிக்கு வந்தபின்னர் அண்மைக்காலமாக வடபகுதியில் இராணுவத்தினர் சிறியளவிலான புதிய பாணியிலான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். கெரில்லா தாக்குதல்கள் போன்று தற்போது படையினர் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகளையே கைக்கொள்கின்றனர் என கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். குடாநாடு மீது பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் தேர்தல் ஆண்டாக கருதப்படும் இவ்வாண்டில் அரசு நீண்டகாலம் தொடரக்கூடிய பாரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என அவதானிகள் மத்தியில் ஓர் அபிப்பிராயம் நிலவுவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவிற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவேன்

### -தொண்டமான்

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக்கட்சிக்கு தொடர்ந்து எனது ஒத்துழைப்பை நல்குவேன் எமது பிரச்சினை பேசித் தீர்க்கப்பட்டுவிட்டது'' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செள. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'வீரகேசரி' பத்திரிகைக்கு அவர் அளித்த விசேட பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் புதுவருடத்தில் ஜனாதிபதியுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் தனது கோரிக்கையில் அனேகமானவை நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்ததைத் தொடர்ந்து தான் இம் முடிவுக்கு வந்ததாகவும் தெரிவித்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுத கொள்வனவால் பெரும் நிதி நெருக்கடி; முதலீட்டு கடனுக்கு வங்கிகள் கடும் விதிகள்

## தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன

[கொழும்பு]

சிறிலங்கா அரசு பெருமளவு நிதியை இராணுவத் தளபாடக் கொள்வனவிற்கு செலவீடு செய்வதால் பெரும் நிதி நெருக்கடி எழுந்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்க வங்கிகள் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளமையால் கைத்தொழில் நிலையங்கள் பல இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டதாக கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

சிறிலங்கா அரசு பெருமளவு நிதியை இராணுவத் தளபாட கொள்வனவுக்கு செலவிட்டுள்ளதால் ஏற்பட்ட நிதி நெருக்கடியில் ஆறு தொழில் நிலையங்கள் மூடப்பட்டதாக

சிறிலங்காவின் இந்த ஆறு கைத்தொழில் நிலையங்களும் வங்கிகளின் நிபந்தனைகளை ஈடுசெய்ய முடியாமையினால் மூடப்பட்டன. பெருந்தொகையான ஆயுதக் கொள்வனவுக்கு பெருமளவு பணம் செலவிடப்

பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகள் தமது வழமையான விதிகளில் கடும் கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளன.

சிறிலங்காவின் வங்கிகள் விதித்த கடன் நிபந்தனை

முயற்சிகளை தொடரமுடியாத நிலையில் ஆறு கைத்தொழில் நிறுவனங்களும் தமது செயற்பாட்டை நிறுத்தியுள்ளன.

விமானங்கள், புத்தகப்பை, டாங்கிகள் என பெரு

## பிரேமாவின் உறவினர்கள் எதிர்க் கட்சிகளுக்கு ஆதரவு?

### பிரேமாவின் சிலையை டி.பி. திறப்பதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் உறவினர்கள் எதிர்க் கட்சிக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர் கட்சிக்கு இவர்கள் ஆதரவு அளிப்பது குறி

பிரேமதாசாவின் செயற்பாடுகளை அலங்கிரப்படுத்திவிட்டு தேர்தல் காலத்தில் மட்டும் அவரின் பெயரைப் பாவிப்பதை அனுமதிக்க முடியாது எனவும் பிரேமதாச குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மே முதலாம்

சிலை திறப்பு விழா நடைபெறவுள்ளது இந் நிகழ்விலும் கலந்துகொள்ளப்போவதில்லை என அவர்கள் தெரிவித்தனர். இந் நிகழ்வுக்கு உபசபாநாயகர் காமினி பொன்சேகாவை அழைக்கும்படி சிறிசேன குரேயிடம் கோரிக்கை விடுத்திருந்த போதும் அவர் அழைக்கப்படவில்லை என

விட்டுள்ளதால் ஏற்பட்ட நிதி நெருக்கடியில் ஆறு தொழில் நிலையங்கள் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மூடப்பட்டன; போருக்கான ஆயுதக் கொள்வனவுக்கு பெருமளவு பணம் செலவிடப் படுவதால் ஏற்பட்ட பொரு

துள்ளன.

இலங்கையின் வங்கிகள் விதித்த கடன் நிபந்தனை களையடுத்து தமது தொழில்

தியுள்ளன.

விமானங்கள், யுத்தக்கப் பல், டாங்கிகள் என பெருமளவு பணத்திற்கு ஆயுதத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தலில் எதிர் கட்சிக்கு இவர் கள் ஆதரவு அளிப்பது குறித்து பரிசீலித்து வருகின்றனர்;

கடந்த சில காலமாக பிரே

எதிர்வரும் மே முதலாம் திகதி ஜனாதிபதி விஜேதுங்க வினால் பிரேமதாசாவின்

விடுத்திருந்த போதும் அவர் அழைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது;

# அன்னை பூபதி நினைவாக இன்று கோட்டரீதியாக கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நினைவு தினமான இன்று யாழ் மாவட்டத்தில் கோட்ட ரீதியாக மூன்று இடங்களில் நினைவுப் பொதுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன;

இந் நினைவுக் கூட்டங்களில் கருத்துரைகள் வில்லிசை, நாட்டிய நாடகம் என்பன வற்றுடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தீவகம், வலிகாமம் கோட்டங்கள் மட்டு அம்பாறை தொடர்பகம் என்பவற்றிற்கு யாழ் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இரவு 7.30 மணிக்கு நினைவுக் கூட்டம் நடைபெற வுள்ளது.

தென்மராட்சிக் கோட்டத்தில், மட்டுவில்கமலாசனி வித்தியாசாலையில் இரவு 7.30 மணிக்கு நினைவுக் கூட்டம் நடைபெறவுள்ளது;

வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் மாலிசந்தி பிள்ளையார் கோவில் முன்ற லில் இரவு 7.30 மணிக்கு நினைவுக் கூட்டம் நடைபெற வுள்ளது;

## அன்னைபூபதி நினைவாக இரு நாள் உண்ணாவிரதம்

அன்னைபூபதி நினைவாக நேற்றும் நேற்றுமுன்தினமும் 2 தினங்கள் யாழ். வடப் பகுதியில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. இவ் உண்ணாவிரத நிகழ்ச்சி கன்னாதிட்டி காளி கோவில் முன்றலில் இடம்பெற்றது;

நேற்று முன்தினம் இடம்பெற்ற உண்ணா விரதத்தில் ஈகச் சுடரை அரசியல் துறையைச் சேர்ந்த திரு: ஜீவா ஐயா ஏற்றிவைக்க, மாநகரப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் அன்னைபூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். இவ் உண்ணாவிரத நிகழ்ச்சியில் அரசியல் துறையைச் சேர்ந்த திரு: ஜீவா ஐயா, கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

அன்னை பூபதி அறிவுப் போட்டி

## சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவருக்கு இன்று பரிசு

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவாக நடாத்தப் பட்ட பொது அறிவுத் தேர்வில் தோற்றி சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை பத்து மணியளவில் உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. திரு. சி. இளம் பரிதி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், செல்வி திலகவதி பெரியதம்பி, திரு. கோ. கந்தசாமி, திரு. ஆர். எஸ். நடராசா, அருட்திரு பிரான்சிஸ் ஜோசப், செல்வி ரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்;

## மாதகலில் கண்ணிவெடி 3 இராணுவத்தினர் காயம்

மாதகல் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என்று பலாலி இராணுவ முகாம் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது;

மாதகல் பகுதியிலுள்ள இராணுவத்தினர் விடுமுறைக்காக பலாலி இராணுவ முகாம் நோக்கி வந்துகொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## இன்று படகு சேவை இல்லை

தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று கிளாலி-பூநகரிபடகு சேவைநடைபெற மாட்டாது. நாளை படகு சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும்; என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## கப்பல் நோயாளர் கவனத்திற்கு

எதிர்வரும் வியாழக்கிழமை யன்று கொழும்பு செல்ல இருக்கும் நோயாளர்கள் தமக்கு இரு நாட்களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் நண்பகல் 12-00 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சமுகம் தரும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இரு தினங்கள் மூடப்படும்

அன்னை பூபதியின் நினைவுத் தினத்தை முன்னிட்டு இன்றும், நாளையும் அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும், மோட்டார் வாகனப் பதிவுச் செயலகமும், விசாரணைப் பகுதிச் செயலகமும் திறக்கப்படமாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்!

ஐக்கிய தேசியக் கட்சியினர் நடாத்தும்

# பிரேமதாசா நினைவுவைபவங்களில் எமது குடும்பம் பங்குபற்றாது

– ஹேமா பிரேமதாசா அறிவிப்பு

"எனது கணவர் திரு. ஆர். பிரேமதாசாவின் வருடாந்த நினைவு தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியினர் ஒழுங்கு செய்துள்ள வைபவங்களில் நானோஎனது பிள்ளைகளோ அல்லது உறவினர்களோ கலந்து கொள்ளும் நோக்கம் இல்லை" என திருமதி ஹேமாபிரேமதாசா தெரிவித்துள்ளார்;

"மே மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள வைபவங்கள் தொடர்பாக இப்பொழுது ஐ.தே.க விலிருந்து அழைப்புகள் கிடைத்து வருகின்றன;

"எனது கணவரின் மறைவை அரசியல் லாபத்திற்காக பாவிக்கும் நடவடிக்கையையே இதுவரையும்; எதிர்வரும் தேர்தலுக்கு எம்மைப்பயன்படுத்த ஐ.தே.கவினர் முயல்கின்றனர்.

"தென் மாகாணசபைத் தேர்தல் தோல்வியின் பின்னரே எம்மீது இவர்களுக்கு கருணை பிறந்துள்ளது; இவர்களின் அரசியல் இலாபத்திற்கு எம்மைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது" என திருமதி ஹேமாபிரேமதாசா தெரிவித்தார்.

# கடற்படை தாக்குதலால் படகுசிதறியது மீனவர் ஒருவரைக் காணவில்லை

குருநகர் கடலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் படகு மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய கண்மூடித்தனமான ஷெல் மற்றும் துப்பாக்கித் தாக்குதலுக்கு படகு சின்னாபின்னமாகி கடலில் மூழ்கியது. இதன்போது இப்படகில் இருந்த மீனவர் ஒருவரை காணவில்லை, இரு மீனவர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

கல்முனைப் பகுதியில் இருந்து வந்த கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் இத் தாக்குதலை மேற்கொண்டனர்; சுமார் ஒரு மணி நேரம் வரை இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. அப்போது அப்படகில் இருந்த மீனவர்களான சிறில் சுவக் (வயது17), அ. விக்ரர், சு. தம்பி ஆகிய மூவரும் கடலில் குதித்தனர்; இவர்களில் சிறில் சுவக் என்பவர் கரை திரும்பவில்லை

இச் சம்பவம்பற்றி அப்படகில் சென்று கரை திரும்பிய விக்ரர் என்னும் மீனவர் தெரிவிக்கையில்; கடற்படையினர் தமது படகிற்கு மிகவும் அருகில் கிட்டத்தட்ட இரண்டு மூன்று அடி வித்தியாசத்திலேயே நின்று துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும். தான் படகு நீரில் அமிழும் வரை படகை பிடித்துக் கொண்டு நின்றுவிட்டு பின் சவள் பலகையின் உதவியுடன் நீந்தத் தொடங்கியதாகவும் தெரிவித்தார்;

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தாக்குதலை நடத்திவிட்டு கடற்படையினர் சிறிது தூரம் சென்று மீண்டும் திரும்பி வந்து தன்னை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் அப்போது அவர்கள் மிகவும் அருகில் வந்ததாகவும், தன்னை தூக்கிக்கொண்டு சென்றுவிடுவார்களோ என தான் நினைத்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடற்படையி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பன்னாடைப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம்;
TASTELINE INDUSTRIES(PVT) LTD,14,Seenier Lane, JAFFNA.
(இ-9053)

**வாடகைக்கு வீடு தேவை**

நாவலர் வீதி, கே.கே.எஸ். வீதி, பலாலி வீதிக்கிடைப்பட்ட பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை; தொடர்பு நா; லோகேஸ்வரன், இல 8 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை; (8060)

**துளிர்**

தமிழ் நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம் சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (8085)

**தூக்கு மேடைக் குறிப்பு**

பேர்லினில் தூக்கிலிடப்பட்ட ஜூலியஸ் பூசிக் சிறையிலிருந்த போது எழுதப்பட்ட சிறைக்குறிப்புகள் விற்பனையாகிறது - வசந்தம் புத்தக நிலையம் (8086)

**இறைச்சிக்கோழி**

சிறப்பு விருந்துகளுக்கு உகந்த புறயிலர் முறைப்படி வளர்ந்த இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள், உயர் இன அடைமுட்டை, வளர்ப்புக் குஞ்சுகள் விற்பனையாகின்றன; யாழ் வீதி, உரும்பராய்ச் சந்தி; (அன்னைபூபதி கலையரங்கம் அருகில்); (8054)

**இலவச ஆலோசனை**

லண்டனில் A; C. M; A; Transport Marketing பட்டங்கள் பெற்றவர், இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தில் மேல் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகின்றார்; சு; கதிரமலைப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்; (7951)

**தவறிவிட்டது**

18-4-94 நுணாவில் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையே சிதம்பரப் பிள்ளை லோகநாதனின் ஒரு சிவப்பு நிறபேர்ஸ் தேசிய அடையாள அட்டை செஞ்சிலுவைச் சங்க அடையாள அட்டை தொலைந்து விட்டது; கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சாவகச்சேரிச் சந்தையில் இருக்கும் டாக்டர் S. S. அருளானந்தத்திடம் ஒப்படைக்கவும்; (8088)



ஏப்ரல் 23 யாழோசை மன்றத்தினர் வழங்கும் ஏப்ரல் 24

மாபெரும் இசை நிகழ்வு

## செந்தமிழ் பாட்டு II

விரைவில் எதிர்பாருங்கள்

(இ-9175)



உ
சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் சித்திரை மாதம் 9ஆம் நாள் (22-04-94) வெள்ளிக்கிழமை மு; ப; 9.00 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் வரும் சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் புதல்வி திருவளர் செல்வி

**காயத்திரி அவர்கட்கு**

எமது இல்லத்தில் நடைபெறவுள்ள பூப்புனித நீராட்டு விழா வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் சமுகமளித்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

இப்படிக்கு
தங்கள் நல்வரவை நாடும்
திரு திருமதி ஆ. நவரத்தினசாமி
(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரர் குடத்தனை)

"உமாபதி"
நாகர் கோயில் மேற்கு,
நாகர்கோயில்;
(8042)



உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பவ வருஷம் சித்திரை 8 ஆம் நாள் (21-04-94) வியாழக்கிழமை மு; ப 8.01 மணி தொடக்கம் மு. ப; 10; 00 மணி வரை வரும் சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புதல்வன் திருநிறை செல்வன் **துஷியந்தன் (துஷி)** ஆசிரியர் கண்ணகம் நாகேஸ்வரி வித்தியாசாலை அவர்களுக்கும் | திருநிறை செல்வி **கலாதேவி (கலா)** அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி திருமணம் புலோலி பசுபதீஸ்வரர் ஆலய அம்பாள் சந்நிதியில் நடைபெறவிருப்பதால் தாங்கள் சுற்றம் சூழ வருகைதந்து புதுமணத் தம்பதிகளுக்கு நல்வாழ்த்துக் கூறி ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்;

தங்கள் நல்வரவை நாடும்
திரு திருமதி நா; சி; நாகலிங்கம்
பிருந்தாவனம்
தெல்லிப்பழை

தற்போதைய முகவரி:
கிறேஸ்லின்,
உடுவில் மகளிர் கல்லூரி பின்புறம்,
உடுவில்;

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

(8079)



வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தும்

போராளிக் கலைஞர்களின்

## இன்னிசை பாடல்கள்

இடம்: புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி
காலம்: 20-4-94
நேரம்: இரவு 7 00 மணிக்கு

அன்பளிப்பு: 10/-, 25/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

(இ-9188)



வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சமாசத்தின்

## அறிவித்தல்

தியாக தீபம் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டின் இறுதி நினைவு நாளான இன்று எமது அங்கத்துவ நிறுவனங்கள் தமது கிளைகளில் கொள்வனவு நடவடிக்கையை மட்டும் மேற்கொள்வதுடன் தமது நிறுவனம் உள்ளிட்ட கோட்டத்தில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இல. 499,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-9194)

சா. செல்வரட்ணம்
தலைவர்
வடமாகாண ப. தெ வ கூ நி;
சமாசம்


## நினைவு கூருகின்றோம்...

**1994-04-19**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வன்னி** (வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்- தம்பிலுவில்-01-அம்பாறை)

1988-ம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில்வீரச்சாவெய்திய,

**அரசன்** (தங்கராசா கிருஷ்ணபிள்ளை-காரைதீவு-01- அம்பாறை)

மட்டு-பாலைற்கொடிச்சேனையில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**லூக்காஸ்** (மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை-முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை-மட்டு)

செட்டிப்பாளையத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் கைது செய்யப்பட்டு சம்மட்டியால் அடித்துக் கொலைசெய்யப்பட்டு எமைப்

# தியாக தீபத்தின்
# 6-ம் ஆண்டு நினைவலைகள்




பேசரை நிறுத்து புலிகளோடு பேசு
அன்னையின் அடிநாதம் அதுவாக இருந்தது
அன்னையின் அறவேள்வி 31நாட்கள் நடைபெற்றது
தமிழீழம் முழுவதும் அன்னை முன் திரண்டது

வீரத்தின் விளைநிலம் கிரானிலே வந்த
விடிவெள்ளி பூபதி அன்னையோர் தீபம்
உண்ணாத நோன்பது நோற்றாளே பாரத
முகமூடி கிழித்தங்கே நீதியை மீட்டாள்

மூலிகை மருந்தகம்
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

## மருந்துப் பால்மா வகைகள்

(தனியார் வரைவுள்ளது)

Drugs & Milk Foods (Pvt) Ltd
484, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9195)

சஞ்சீவ கரணி
பிரதான வீதி, சித்தங்கேணி

செட்டிப்பாளையத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் கைது செய்யப்பட்டு சம்மட்டியால் அடித்துக் கொலைசெய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**2-ம் லெப்.கலா** (பொன்னம்பலம் சதானந்தரத்தினம்-3-ம் குறிச்சி-மட்டு)

இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கு எதிராக இந்திய அரசுக்கு இரண்டு நிபந்தனைகளை முன்வைத்து மட்டு-மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தமிழீழமக்களின் விடிவுக்காக சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டு ஈகச்சாவெய்திய,

**அன்னைபூபதி** (பூபதி கணபதிப்பிள்ளை-கிரான்-மட்டு)

1991-ம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஆதவன்** (பாலகிருஷ்ணன் மோகன்ராஜ்-இரணைமடுச்சந்தி-கிளிநொச்சி)

யாழ்-வீமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**தங்கச்சி** (முருகையா நிமலகாந்தன்-மாவைக்கலட்டி, தெல்லிப்பழை-யாழ்)

மன்னார்-பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.கேணல் இரேசி** (கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை-ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சி-கிளி)

**லெப். வாசு** (துரைராசா துருபதராஜ்-பண்டித்துறை, நெல்லியடி-கரவெட்டி)

**2-ம் லெப்.தென்னவன்** (வைத்திலிங்கம் விக்கினேஸ்வரலிங்கம்-மயிலியதனை-தொண்டைமானாறு)

**2-ம் லெப்.சிக்கோ-மாதர்** (திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்-பிறவுண்வீதி-யாழ்ப்பாணம்)

1993-ம் ஆண்டு மட்டு-நவிண்டிமாமடுப்பகுதியில் எமது முகாமொன்றினை சிறிலங்கா ராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கௌரவன்** (கனகலிங்கம் பாலசிங்கம்-பண்டாரியவெளி-மட்டு)

**கலைமாறன்** (குமாரதாஸ் ஜெயதாஸ்-குருக்கள்மடம் -மட்டு)

இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கஜண்ஸ்-வாகீசன்** (துரைராசசிங்கம் குலசேகரம்-மீசாலை தெற்கு-சாவகச்சேரி)

**2-ம் லெப். வீரையன்** (கந்தசாமி விஜயதாஸ்-அத்திரான் வடக்கு, தாளையடி-வடமராட்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8191)

# வீர நினைவாகி எம் நெஞ்சமதில்





| 2-ம் லெப். மதுவன் (தவராஜசிங்கம் விஜயசேகரன்) | | கப்டன் காண்ஸ் (தவராஜசிங்கம் குலசேகரன்) |
|---|---|---|
| 1972·02·24 | <தோற்றம்> | 1973·11·15 |
| 1990·11·01 | <வீரச்சாவு> | 1993·04·19 |

எங்களின் இனத்தைக் காக்க அண்ணனின் வழியில் நின்று
எதிரியை விரட்டும் பணியில் மணலாறு மண்ணதனில்
மாவீரனாகி நீயும் மூன்றாண்டு ஆனதப்பா மதுவா
தம்பி காண்சனும் கூட வந்து ஓராண்டு ஆனதப்பா
எண்ணும் போதெல்லாம் உங்கள் நினைவுகள் எம்நெஞ்சில்
வையம் உள்ளளவும் நீங்கள் வாழ்ந்திடுவீர்
உங்கள் பாதங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்

- குடும்பத்தினர்

சாவகச்சேரி. (8082)

## நச்சு சிலிண்டர் மீட்பாம்

(கொழும்பு)

விஷ வாயுவை உருவாக்கும் இரசாயனக் கலவைகள் நிறைந்த நான்கு சிலிண்டர்கள் நேற்று கொழும்புத்துறை முகத்தில் துறைமுக அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சிலிண்டர்கள் இந்தியாவின் பம்பாய் நகரிலிருந்து எகிப்து வழியாக இஸ்ரேலுக்கு எடுத்துச் செல்லும் முகமாக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## திருமணப்பதிவு

இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினால் தீவகத்தைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு இலவச திருமணப்பதிவு செய்து வைக்கும் வைபவம் அண்மையில் அத்தியடியில் உள்ள கழகப்பணிமனையில் நடைபெற்றது. (22)

## தபால் பொதி பரிசீலிப்பு

(கொழும்பு)

தபால்மூலம் அனுப்பப்படும் பொதிகள், கொழும்பு தபாலகங்களில் திறந்து பரீட்சிக்கப்பட்டபின்னரே அஞ்சல் செய்ய ஏற்கப்படும் என தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

குண்டுவெடிப்புகளை தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களிற்காகவே இது அமுல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் உள்ளூர், பிறநாட்டுப் பொதிகளுக்கு பொறுப்பாயுள்ள தபால் அதிபரினால் அல்லது கடமையில் உள்ள கருமபீட உத்தியோகத்தரினால் பொதிகளில் உள்ளடக்கப்படவிருக்கும் பொருள்கள் பரீட்சிக்கப்பட்டு அவரின் முன்னிலையிலேயே அவை பொதியாக்கப்பட்டபின்பு அனுப்புவதற்கு தபால் அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

எனினும் தபால் அலுவலகங்களில் வடபகுதிக்கான பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## சமவெளியில் சமராடிய சரா அண்ணாவின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



### லெப். கேணல் சரா

| மலர்வு: | வீரச்சாவு: |
|---|---|
| 19-04-1962 | 27-07-1991 |

அண்ணா நீங்கள் மரணித்து விட்டீர்களா
இல்லை: இல்லை
நீங்கள் நேசித்த அனைவரின் நெஞ்சங்களிலே
தினம் தினம் வலம் வந்துகொண்டே இருக்கிறீர்கள்
எந்த செயலை செய்ய முயலும் போதும் முன்நின்று
என்னை வழி நடத்துகிறீர்கள்!
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
நான் உங்களை மறவேன்!

ம. மானா
(மானா) (தம்பி)

கல்வியங்காடு (8083)

# தியாகச்சுடர்



# அன்னை பூபதி

பாரதநாட்டின் படையெடுப்பின்-
கெடுபிடியிலே
தமிழீழ மக்கள் வாழ்வுதன்னில்
இருள் சூழ்ந்த வேளையில்:
அன்னையே
பொருள் பொதிந்த யுத்தமொன்று-
நீ நடத்தினாய்



வெளியீடு:

யாழ் மாவட்ட அனைத்து கூட்டுறவு
சங்கங்களின் சார்பில்

**யாழ்ப்பாண மாவட்டக்**
**கூட்டுறவுச்சபை**

(இ-9117)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

இ. தொ. காவின் மீதான

# இடைக்கால தடை உத்தரவு நீதிமன்றத்தினால் நீக்கம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசான இ. தொ. காவின் தேசிய சபை அட்டன் நகரில் கூடியபோது மேற்கொண்ட தீர்மானத்தை அமுல்படுத்த இடை நிறுத்தக்கோரி கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை தொடர்ந்து விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு நீக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய மாகாணசபையின் உறுப்பினரான ஆர். தங்கவேலு இ. தொ. கா. தலைவர் தொண்டமானையும் உப தலைவர் ஏ. எம். டி. ராஜனையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து கடந்த ஜனவரி 11-இல் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதித்திருந்தது தெரிந்ததே.

## கொழும்பு விஜயம்

(கொழும்பு)

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் புதல்வர் சதிஷ் தயாள் சர்மா தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்புக்கு வந்துள்ளார். ஏழு நாட்கள் கொழும்பில் தங்கியிருக்கவுள்ள இவரை விமான நிலையத்தில் வைத்து அமைச்சர் தொண்டமானின் பேரனான எஸ். ஏ. ஆர். தொண்டமான் மற்றும் பிரியந்த கல்யாணரட்ண, யசா கல்யாணரட்ண, கே. சரவணன், ரவி வீரபுர, நேயல் சில்வா ஆகியோர் மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

# உயர்தொழில் ஆங்கிலகற்கை விண்ணப்பிக்கலாம்

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சமூகவியல் அத்திவாரப் பாடநெறிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இப் பாடநெறிக்கான போதனை ஆங்கிலத்தில் கொழும்பில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 27 ஆம் திகதியாகும்.

# தேர்தல் வெற்றியின் பின் எதிரணிக்குள் பிளவு

## - அமைச்சர் லொக்குகே கூறுகிறார்

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றதும் பொது ஜன ஐக்கிய முன்னணியில் பிளவுகள் அதிகரித்துள்ளதாகவும் சிறிமா அணி, சந்திரிகா அணிக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவுகள் இருப்பதாக கூறும் இவர்கள் மிக விரைவில் தமது கட்சிக்கு ஏற்பட இருக்கும் கதியைப் பற்றி கருத்திற் கொள்ளாது இவ்வாறு கூறுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் ஒற்றுமையாக நாட்டிற்குச் சேவை யாற்றுகிறது. பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்தால் அவ் ஆட்சி குறிப்பிட்ட காலத்துக்குக் கூட நீடிக்க மாட்டாது என மேலும் அவர் தெரிவித்தார்.

## பிறந்த நாள் நினைவலைகள்



# லெப். கேணல் சரா

[சின்னத்துரை ஜீவராசா (சிவம்)]

வீரத்தாயின் மழலையாக
19. 04. 1962

வீரமண்ணின் மாவீரனாக
27. 07. 1991

உன் கனவுகள் நினைவாகட்டும்
உன் இலட்சியம் நிறைவேறட்டும்
இந்த மண்ணைக் காத்த வீரனே
உன் நினைவு எம்மைவிட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
சித்தப்பா, அன்ரி,
தம்பிமார்; தங்கைமார்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

(8076)

## நினைவலைகள்

8 ஆம் ஆண்டு — 5 ஆம் ஆண்டு





பண்டிதர்
சங்கரவைத்திய
லிங்கனார்

துணைவி
வை. இலட்சுமி
காந்தம்

| | | |
|---|---|---|
| 14-01-1906 | தோற்றம்: | 19-12-1919 |
| 17-04-1986 | மறைவு: | 04-01-1989 |

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியின் நின்று வாழ்பவன் வானுலகத்தில் உள்ள தெய்வ நெறியில் வைத்து மதிக்கப்படுவான்.


இன்று நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தெணி, வல்வெட்டித்துறை.

(8075)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
3-11-1934

இறப்பு:
20-03-1994

# பொன்னம்பலம் மதனபூபாலன்

(முன்னாள் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளரும், பருத்தியடைப்பு கிராம முன்னேற்ற சங்கத் தலைவரும், முன்னாள் லவனிதா குடியிருப்பு மக்கள் தொடர்பாளருமாவார்.)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 19-04-94 இவருடைய லவனிதா குடியிருப்பு இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவருக்கு லவனிதா குடியிருப்பு மக்கள் அஞ்சலி செலுத்துகின்றோம்.

லவனிதா குடியிருப்பு
நாவற்குளி.

(8062)

லவனிதா குடியிருப்பு
மக்கள்

# தியாகச்சுடர் அன்னை பூபதியின்

# ஆறாம் ஆண்டு ஞாபகார்த்த தினம்

இந்திய ஆக்கிரமிப்பை உலகறியவைத்து
எம்மக்களை காக்க எழுந்த ஒரு சுடர்
தமிழீழம் எங்கும் பல தீபங்களை ஏற்றிவைத்து
தன்னை அழித்துக் கொண்ட இந்நாளில்
அன்னை ஏற்றிய தீபங்கள் அணையாது காப்பதே
நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

காந்திய நாட்டின்
காட்டுமிராண்டிகள்
ஏந்திய கருவிகளை
ஏளனம் செய்தபடி
செந்தமிழ் மணக்கும்
மாமாங்க மண்ணில்
கந்தகக் காற்றென
அன்னை எழுந்தாள்




தந்தையார் மண்ணிது எம்
தனயரே காப்பர்
வந்த வழி நீ போய்விடு
வாதைகள் செய்யாமல் என
அந்நிய இராணுவ
அரக்கனை அசைத்து
முந்தியே மொழிந்தவள்
தன் பெரும் செயலால்.

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்
10, செம்பியன் ஒழுங்கை, கொக்குவில்.

(சி-9193)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

பிறந்தவர் யாவருமிறப்பதுறுதியெனும் பெற்றியை யறிந்தாரேன் - மானம் துறந்தற மறந்தும் பின்னுயிர் கொண்டு வாழ்வது சுகமென மதிப்பாரோ,

- பாரதியார்,


# ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2028
தபால் பெட்டி எண் 05


## தமிழினத்தின் உந்து சக்தி

அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும். தமிழீழ மண்ணிற்காகவும், தன் இன மக்களுக்காகவும் சாகும்வரை உண்ணாநோன்பிருந்து தன்னுயிர் ஈந்த மாதரசியின் நினைவுநாள் இதுவாகும்.

காந்தியமே எமது தத்துவம், அகிம்சையே எமது கொள்கை என தினமும் உலகிற்குப் பறைசாற்றி வரும் இந்திய வல்லாதிக்கத்தின் முகமூடியை தியாகி திலீபனைத் தொடர்ந்து அன்னை பூபதி மீண்டும் ஒருமுறை கிழித்தெறிந்தார். அன்னை பூபதியின் சாகும்வரையிலான இப்போராட்டமானது இந்திய அரசு காந்தியின் இறந்த உடலை மட்டும் புதைக்கவில்லை, அத்துடன் சேர்த்து காந்தியின் கொள்கைகளையும் புதைத்துவிட்டது என்பதை உலகிற்கு வெளிக்காட்டியது.

அன்னை பூபதி சாதாரணகுடும்பத்தைச் சேர்ந்தவர். ஆயினும் இந்திய வல்லாதிக்கத்தின் கொடுமை கண்டு அவர் தனது குடும்பத்தை துறந்து தனது இனத்திற்காகப் போராட முன் வந்தார். இதேவேளை அன்னை பூபதி தனது சாகும்வரை உண்ணாநோன்பு போராட்டத்தின் போது தனியாக பசியுடன் மட்டும் போராடவில்லை, இந்திய இராணுவம் உண்ணாவிரதத்தை கலைக்க செய்த சதி நடவடிக்கைகள், இராஜதந்திர முயற்சிகள், இராணுவ அச்சுறுத்தல்கள் என்பனவற்றையும் மீறியே தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்.

அன்னை பூபதியின் இப்போராட்டமானது, இந்திய இராணுவத்தின் பிரவேசத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டும் எதிர்க்கவில்லை, தமிழ்மக்கள் அனைவருமே ஒட்டுமொத்தமாக எதிர்க்கின்றனர் என்பதை உணர்த்திய போராட்டமாகும். இதேசமயம் தியாகி திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம், அகிம்சை போராட்டமாக இருந்தபோதும் தமிழரின் தேசிய இன விடுதலைப்போராட்டத்தை இந்தியா எவ்வாறு அணுகும்

## அன்னை பூபதி நினைவுப் போட்டி கோட்டமட்டத்தில் பரிசு பெறுவோர்

கல்விக் கோட்ட மட்டங்களில் முதலிரு இடங்களையும் பெற்று விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சிறப்புப் பரிசுகளைப் பெறும் மாணவர்கள்.

**வேலணைக் கல்விக் கோட்டம்**

ஆண்டு 6 நடராசா கிருஷ்ணராஜ் யா - புங்குடுதீவு சிறீ சித்திவிநாயகர் வித்தி.
ஆண்டு 8 பாலரிஷி கணேசையா யா - மண்கும்பான் அ. த. க. பா.
ஆண்டு 9 சிவனுஷா கதிரவேலு யா - வேலணை சரஸ்வதி வித்தி.
ஆண்டு 11 அஸ்ரின் கொன்பியூசியஸ் யா - மண்டைதீவு றோ. க. பா.
ஆண்டு 11 ஆரோக்கிய நாதர் லோகநாதன் யா - மண்டைதீவு றோ. க. பா.
ஆண்டு 12 ரூபகௌரி சிவராசா யா - மண்டைதீவு ம. வி.
ஆண்டு 12 இரத்தினசிங்கம் தர்மரன் யா - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி.

**வலிகாமத்துறைக் கல்விக் கோட்டம்**

ஆண்டு 8 சைலஜா கதிரேஸ்வரன் யா - நாரந்தனை கணேச வித்தி.
ஆண்டு 8 தங்கவேல் சிவரூபன் யா - யாழ்ரன் கல்லூரி.
ஆண்டு 9 தருமேஸ்வரி இலட்சுமணன் யா - நாரந்தனை கணேச வித்தி.
ஆண்டு 10 பாமேஸ்வரி இராசரத்தினம் யா - நாரந்தனை கணேச வித்தி.
ஆண்டு 10 நாகன் மணிமாறன் யா - நாரந்தனை கணேச வித்தி.
ஆண்டு 11 டெமேந்தி ஜேசுராசன் யா - நாரந்தனை கணேச வித்தி.

**சங்கானைக் கல்விக் கோட்டம்**

ஆண்டு 7 ஸ்ரீபாலச்சந்திரன் ஸ்ரீசங்கர் யா - வட்டு. திருஞானசம்பந்த வித்தி.
ஆண்டு 8 இராஜலிங்கம் பிரசாந்தன் யா - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
ஆண்டு 8 தங்கராசா பிரபாகரன் யா - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.
ஆண்டு 11 ஹரப்பிரியா சிவதட்சணாமூர்த்தி யா - சங்கானை சிவப்பிரகாச வித்தி.
ஆண்டு 12 சிவசுப்பிரமணியம் குகநேசன் யா - வட்டு. இந்துக் கல்லூரி.
ஆண்டு 12 வடிவேல் வடிவழகையன் யா - வட்டு. இந்துக் கல்லூரி.

**தென்மராட்சிக் கல்விக் கோட்டம்**

ஆண்டு 6 விவேகானந்தன் கோகுலன் யா - மகளிர் ம. வி. சாவகச்சேரி.
ஆண்டு 6 தவாதேவி தங்கராசா யா - மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வி.
ஆண்டு 7 சுகந்தி தங்கவேல் யா - மந்துவில் றோ. க. த. க. பா.
ஆண்டு 7 குகதாசன் தயானன் யா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆண்டு 8 தேவிகா ஜயரத்துரை. செஞ்சோலை மகளிர் பாடசாலை
ஆண்டு 8 சஞ்சிகா கந்தையா செஞ்சோலை மகளிர் பாடசாலை.
ஆண்டு 8 ரோகிணி கந்தையா யா - மகளிர் ம. வி. சாவகச்சேரி
ஆண்டு 9 பிரபாவதி செல்லத்துரை யா - மந்துவில் றோ. க. த. க. பா.
ஆண்டு 10 - நடராஜா அருள்வேள் யா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆண்டு 11 - தனபாலன் ரஞ்சித்குமார் யா - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி.
ஆண்டு 11 - குலசேகரம் ஸ்ரீதாஸ்தனன் யா - டிறிபேக் கல்லூரி.
ஆண்டு 12 - தவரத்தினராசா மஞ்சுதன் யா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆண்டு 12 - சின்னத்தம்பி செந்தில்குமரன் யா - டிறிபேக் கல்லூரி.

**கரவெட்டி கல்விக் கோட்டம்**

ஆண்டு 6 - தமிழினி இராமச்சந்திரன் யா/வல்வெட்டி இ. த. க. பா.
ஆண்டு 8 - குமுதா யோகலிங்கம் வல்வெட்டி இ. த. க. பா.
ஆண்டு 8 - கமலினி பஞ்சாங்கராதன் வல்வெட்டி இ. த. க. பா.
ஆண்டு 9 - குணாநிதி நடராசா யா - வல்வெட்டி இ. த. க. பா.
ஆண்டு 10 - சுப்பிரமணியன் ஞானசுதீபன் யா - நெல்லியடி ம. ம. வி.
ஆண்டு 10 - பாலசோதி பபிந்தன் யா - ஞானாசாரியார் கல்லூரி
ஆண்டு 10 - பானுமதி பாலசுப்பிரமணியம் யா - ஞானாசாரியார் கல்லூரி
ஆண்டு 11 - அரியநாயகம் தயாபரன் யா - உடுப்பிட்டி அ. மி. க.
ஆண்டு 11 - நாகலிங்கம் கமலபாஸ்கரன் யா - உடுப்பிட்டி அ. மி. க.
ஆண்டு 12 - சிவரஜினி சதானந்தம் யா - நெல்லியடி ம. ம. வி.
ஆண்டு 12 - உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

**பருத்தித்துறை கல்விக்கோட்டம்**

ஆண்டு 6 - சண்முகநாதன் ஜனகன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 7 - சுமிதா எட்மன் பூவிலஸ்யா - செல்தோமஸ் றோ. க. பெண்கள் பா.
ஆண்டு 7 - மேரி பற்றிமா ஜோன்ஜோசப் செல்தோமஸ் றோ. க. பெண்கள் பா.
ஆண்டு 8 - ஜெகநாதன் வாசுதேவன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 8 - பஞ்சகல்யாணி பாலச்சந்திரன் யா - அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை.
ஆண்டு 9 - தெய்வகுலேந்திரா உதயதாரன் யா - ஹாட்லிக் கல்லூரி.
ஆண்டு 10 - தங்கராசா பிரதீபன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 10 - நடராசா சந்திரிகாந்தன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 11 - தங்கேஸ்வரன் மாறன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 11 - துரைராசா அரவிந்தன் யா - ஹாட்லிக் கல்லூரி.
ஆண்டு 11 - கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன் யா - ஹாட்லிக் கல்லூரி.

## தாயே களித்திடு!

அன்னை பூபதி!
அமைதி காப்பதாகக் கூறி,
அநியாயம் செய்தவரோடு
ஆகாரத்தைத் துறந்து
அகிம்சைப் போர் தொடுத்தாய்!

பெற்றவள் மக்களுக்காகப்
போருக்கெழுந்திட்டால்
எந்தப் படைகளுக்கும்
மண்டியிட மாட்டாளென்று
மற்றைய தேசங்களுக்கும்
உணர்த்திச் சென்றாய்;

தேரோடும் வீதியிலே
தங்கமகன் திலீபன்
அங்கம் உருக்கி
அமைதிப் படைகளைத்
திகைக்க வைத்து
எங்கள் நெஞ்சங்களில்
நிற்கிறான்.

நீயோ...!
நாசப்படைகளை மட்டுமல்ல
நமது தேசத்து மக்களையும்
திகைக்க வைத்தாய்.
அதனால்தான்! எங்கள்
கடலும் தரையும்
காவியம் படைத்து மற்றைய
தேசங்களை வியக்க வைத்து
உன் எண்ணத்தைப்
பிடித்து நிற்கிறது.
தேசம் நிலைக்கும்!
தாயே களித்திடு.

-மீசாலையூர் கமலா

## மட்டக்களப்பில் ஊற்றெடுத்த மா நதி

அம்மா பூபதி
நீ, மட்டக்களப்பில் ஊற்றெடுத்த
மா நதி
பாரதத்தின் அழுக்குப் படிந்த அசோகச்சக்கரம்
எங்கள் குருதியில்
தன்னைக்
குளிப்பாட்டிக் கொண்டிருந்த வேளையில், அக்
கொடுமை கண்டு
கொதித்து முழங்கிய
நெருப்புக் குயில் நீ
தேசத்திலும் மக்களிலும் நீ கொண்ட
பாசத்தினால்
பட்டினி நெருப்பில் உன்னைப்
பஸ்பமாக்கத் துணிந்தாய்!
முழுதாக ஒரு திங்கள்
அம்மா நீங்கள் பூண்டிருந்த தவக்கோலம்
பூமிக்கே புதுக்கோலம்!
அதில் தெரிந்தது தமிழினத்தின் எதிர்காலம்.
பாரத அரசின்
பாதக இருள் வடிவத்தை
பாருக்கே வெளிச்சம் போட்டுணர்த்த
நீயே உன்னைத் தீப்பந்தமாக்கிக் கொண்டு
திருவிளக்காக ஒளிர்ந்தாய்!
வடவாரியரின் வஞ்சக வடிவத்தை
வையகம் உணர்ந்ததுடன்
தமிழ்க் குலத்தின்
திடசித்தையையும் எல்லை தாண்டிய
தற்கொடையையும்
பூகோளத்துக்குப் புரிய வைத்தாய்

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம், அகிம்சை போராட்டமாக இருந்தபோதும் தமிழரின் தேசிய இன விடுதலைப்போராட்டத்தை இந்தியா எவ்வாறு அணுகும் என்பதை உணர்த்தியதென்றால், அன்னை பூபதியின் போராட்டம் இந்தியா தமிழரின் விடுதலை உணர்வை ஒடுக்குவதுவரையிலும்செல்லும் என்பதை உணர்த்தியதெனலாம்.

இதேசமயம் அன்னைபூபதி நடத்திய இப்புனிதப் போர் தமிழ்ப்பெண்களின் பெருமையை உலகில் உயர்த்திய போராட்டமாகும்; அத்தோடு, அன்னை பூபதியின் போராட்டம், தமிழீழ மண்ணில் உருவாகிய வீரமிகு புதல்வர்களின் தாய்மார்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியதொன்றுமாகும், அதாவது தமிழ் தாய்மார்களின் சுதந்திர வேட்கையையும், துணிவையும் உலகிற்குப் பிரகடனம் செய்த போராட்டம் ஆகும்.

ஆனால் அன்னைபூபதியின் முன்மாதிரியானதுதனியாக தமிழ்ப் பெண்களுக்கு மட்டுமல்ல, உலகின்ஒடுக்கப்படும் பெண்கள் அனைவருக்கும் முன் மாதிரியாகும்; அத்தோடுதேசிய இனப்போரிலோ அன்றி சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போரிலோ ஆண்களின் தியாகம், துணிவு என்பவற்றிற்கு நிகராக தம்மாலும் அர்ப்பணிப்புக்களைச் செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்திய போராட்டமாகும்;

அன்னைபூபதி நடத்திய போராட்டத்தின் நோக்கங்கள் நிறைவுறாமலே அவர் மரணித்திருக்கலாம், ஆனால் அன்னைபூபதி இப்போராட்டத்தின் மூலம் சாதித்தது மிகப் பெரியதாகும்; இந்தியாவின் அரசியல் கபடத்தனத்தை முற்றாக வெளிக்கொணர்ந்தார். இந்தியா தமிழ்மக்களின் பாதுகாவலன் என்று இன்றுகொண்டிருந்த மாயையைகலைத்தார். அத்தோடு தனது அரசியல் லாபத்திற்காகவும் வல்லாதிக்க விஸ்தரிப்பிற்காகவும் இந்தியா தமிழரைப் பலியிட எப்பொழுதும் தயாராக இருக்கின்றது என்பதையும் புரிய வைத்தார்; தமிழர் தமது விடுதலைக்காக சிறிலங்காவுடன் மட்டுமல்ல இந்திய வல்லாதிக்கத்திற்கும் எதிராகப் போராடியே ஆக வேண்டும் என்பதையும் உணர்த்தினார்.

மறுவளமாக அன்னைபூபதியின் போராட்டமானது தமிழர் தேசிய இனப் போராட்டத்தின் உந்து சக்தியாக மாறியது, தமிழீழ மக்களை விடுதலைப் போராட்டத்தில் எழுச்சி கொள்ள வைத்தது. அதிலும் போராட்டத்தில் பெண்களின் விழிப்புணர்வைத் தூண்டியது; இதன் விளைவு அந்நிய இராணுவத்தை தாயகத்தில் இருந்து வெளியேற்ற உதவியது; தற்பொழுது எதிரியுடன் நீண்டகாலப் போரொன்றில் சளைக்காது போரிட உந்து சக்தியாய் உள்ளது.

ஆண்டு 10 - நடராசா சந்திரகாந்தன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 11 - தங்கேஸ்வரன் மாறன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 11 - ஆனந்தராசா அரவிந்தன் யா - ஹாட்லிக் கல்லூரி.
ஆண்டு 11 - கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன் யா - ஹாட்லிக் கல்லூரி,
ஆண்டு 12 - ஜெயப்பிரகாசம் விஜயாலயன் யா - ஹாட்லிக் கல்லூரி
ஆண்டு 12 - ஜெயச்சந்திரன் முகுந்தன் யா - ஹாட்லிக் கல்லூரி,

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 - பிரியதர்ஷினி அருணாசலம் யா - மல்லாகம் ம.வி.
ஆண்டு 7 - கனோசனா நவரத்தினம் யா - அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வி.
ஆண்டு 8 - நடராஜசர்மா சுதர்சன் சர்மா யா - மகாஜனக்கல்லூரி
ஆண்டு 9 - மணிவம் மயூரன் யா - வசாவிளான் ம.ம.வி.
ஆண்டு 10 - சிவஞானசுந்தரம் ஜயசபரன் யா - மல்லாகம் ம.ம.வி.
,, வைத்தீஸ்வரன் கிரிதர் யா - மகாஜனக் கல்லூரி
ஆண்டு 11 - சேகரதரன் இந்திரமோகன் யா - யூனியன் கல்லூரி
,, யோகநாதன் சிவராம் யா - யூனியன் கல்லூரி
ஆண்டு 12 - சச்சிதானந்தம் சஞ்சயன் ,, ,,
,, முருகையா சிவானந்தன் யா - வசாவிளான் ம.ம.வி.
,, சிவாஜினி விநாயகஈஸ்வரன் ,, ,,

யாழ். கல்விக் கோட்டம்

ஆண்டு 7 பிரியதர்சினி சுப்பிரமணியம் யா - வேம்படி மகளிர் கல்லூரி
ஆண்டு 7 காயத்திரி இராசநாயகம் யா. வேம்படி மகளிர் கல்லூரி
ஆண்டு 8 மனோரதி மனோகரன் யா - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
ஆண்டு 8 ஜெனா இராஜநாயகம் வேம்படி மகளிர் கல்லூரி
ஆண்டு 10 சிவகௌரி யோகலிங்கம் ,,
,, நளாயினி நல்லதம்பி ,,
ஆண்டு 11 வெண்ணிலா சிவலோகநாதன் ,,
,, சயந்தினி பொன்னுத்துரை ,,
ஆண்டு 12 சிவதர்சினி சிவசுப்பிரமணியம் ,,
,, ஜெயமாலா தர்மலிங்கம் ,,

நல்லூர் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 - விஸ்வநாதன் விபுலன் யா - இந்துக் கல்லூரி
ஆண்டு 6 - சிவபாலன் சியசன் யாழ் - இந்துக் கல்லூரி
ஆண்டு 7 - தில்லைநாதன் கோபிநாத் யாழ். இந்துக் கல்லூரி
ஆண்டு 7 - ஜெயராசா சசீந்திரன் யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 8 - சிவகுருநாதர் செந்தூரன் யாழ். இந்துக்கல்லூரி
ஆண்டு 8 - ரவீந்திரநாதன் சுரேசன் யா - கொக்குவில் இந்துக் கல்லூரி
ஆண்டு 9 - ஆனந்தலிங்கம் சதீஸ் யா - யாழ் இந்துக்கல்லூரி
ஆண்டு 9 - அலோசியஸ் அமிர்தநாதன் (பிரணவன்) யாழ் - இந்துக் கல்லூரி
ஆண்டு 10 - கனகரட்ணம் காண்டீபன் யா - யாழ் இந்துக்கல்லூரி
ஆண்டு 10 - சொர்ணலிங்கம் தேவலிங்கம் யா - யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 11 - பத்மநாதன் சுஜன் யா - யாழ் இந்துக்கல்லூரி
ஆண்டு 11 - யோகராஜா சிவாகரன் யா - யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 12 - பாலச்சந்திரன் சுதர்சன் யா - யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 12 - சதாசிவம் ராஜீவ் யா - யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 12 - சங்கரப்பிள்ளை வசந்தன் யா - யாழ் இந்துக் கல்லூரி
ஆண்டு 12 - தர்மராஜா வினோதன் யா - யாழ் இந்துக் கல்லூரி

உடுவில் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 - தங்கராசா தனுஷன் யா - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி
ஆண்டு 6 - செல்வராஜா நிர்மலரஜனி யா - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி,
ஆண்டு 6 - இராசகுமார் செல்வச்சந்திரன் யா - உடுவில் முருகமூர்த்தி வித்தி,
ஆண்டு 8 - தங்கராசா கிருபாகரன் யா - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.

(6ஆம் பக்கம் பார்க்க)

வையகம் உணர்ந்திடவே
தமிழ்க் குலத்தின்
திடசிந்தையையும் எல்லை தாண்டிய
நற்கொடையையும்
பூ கோளத்துக்குப் புரிய வைத்தாய்
பூபதித் தாயே!
ஆண்டுகள் ஆறு அதற்குள் ஆகிவிட்டதா
நீங்கள் ஆகுதி ஆகி!
அம்மா ஆறு ஆண்டுகளென்ன
நூறு ஆண்டுகள்
நூறு முடிந்தாலும்
தமிழீழத்தின் இதயத்தில்
தாயவளுன் நினைவுகள்
தளிர்விட்டு தழைத்தபடியே
இருக்கும் என்பது உறுதி
வணக்கம் தாயே - எங்கள்
வாழ்வாய் நீயும் எம்முடன்
வாழ்வாய்,

- நிலா தமிழின் தாசன்

## அகிம்சையின் அவமானம்

பூக்களும் பூகம்பமாகச் சீறுமா?
புற்கள் கூட
அம்பாகப் பாயுமா ? - ஆம்
ஏக்கம் கொண்ட
ஈழத்து மகள்
தூக்கினாளே போர்க்கொடி - அது
அகிம்சையின் அதிரடி.

விபரமறியா பையன்களின்
விளையாட்டு இதுவல்ல
மொத்தத் தமிழினத்தின்
முதுகுகளுமே நிமிர்ந்தது - இதற்கு
இந்தத் தமிழிச்சியின்
இதயமும் ஒரு சான்று.

'மகாத்மா காந்தி
எங்கள் தேச பிதா'
பெருமை பேசியவர்கள்
கத்தியின்றி, ரத்தமின்றி
யுத்தம் செய்தவர்களாம்
இங்கே, கத்தியுடனும், ரத்தத்துடனும்
அமைதி காத்த (அ)கிம்சைவாதிகள்
அணு உலை வெடித்தது போல்
அதிர்ந்து போயிருப்பார்கள்.
அகிம்சை இங்கே
அவமானப் பட்டுப்போனது;
ஆனாலும்,
தமிழினத்தின் உறுதிக்கு
உரமானது;

- அல்லையூர் தர்மினி

ஆயுத தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன இதனால் வங்கிகளின் நிதிக் கையிருப்புகளிலும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளிலும் பணப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது; இதனால் வங்கிகள் வட்டி வீதத்தை அதிகரிக்கவும் கடன் நிபந்தனைகளை மேலும் கடுமையாக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது;

பெரும் முதலீடுகளிலும் வங்கிகளின் ஒத்துழைப்பை எதிர்பார்த்தும் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் புதிய நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கமுடியாது தமது நிறுவனங்களை மூடியுள்ளன; இது இறிலங்காவின் பொருளாதாரத்தில் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தலாம் என பொருளாதார அவதானிகள் கூறுகின்றனர்.

## அறிவித்தல்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுபகுதியினை இலக்கம் 08. 30-01-94நிர்வாகசபை தீர்மானத்திற்கு அமைவாக சகல செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அங்கத்தவர்கள் உடுவில் பகுதியினை 06-ல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நன்றி

மாவட்ட செயலாளர்
(8090) சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம் யாழ் மாவட்டம்

உ

## 16-ம் நாள் நினைவஞ்சலி



கண்ணும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவிலடியைப்பிறப்பிடமாகவும் நாயன்மார் கட்டு அரசடிப்பிள்ளையார் வீதியில் வசித்தவருமாகிய

அமரன்

### செல்வன் தில்லைநாதன் ஐயர் குலேந்திரன் (குலன்)

| தாயின் மடியில் | தயாபரன் அடியில் |
|---|---|
| 1988. 08. 22 | 1994. 04. 04 |

சரக்குந்து வடிவினிலே வந்தகொடுங் காலன்
சற்றுமிரங் காதுன்றன் உயிர்கவர்ந்து சென்றான்
இரக்கமிலான் குருத்திதுவென் றெண்ணிடவும்
மாட்டான்
எடுத்தவனே பாவிசெமைத் துயர்க்கடலில் ஆழ்த்தி
கரக்கழு தெங்கள்துயர் ஆறிடுமோ? உன்றன்
உயிர்கூடலில் மீண்டுவந்து சேர்ந்திடுமோ? மகனே!
பொறுக்கொணவேகுலேந்திரனே! போய்விட்டாய் ஈசன்
போதவிழும் மலர்ப்பாதம் கூடவேண் டிடுவோம்;

# புலிகள் மீதான தடையை நீடிக்கும் அ. தி. மு. க. பிரேரணை ஒத்திவைப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீதான தடை உத்தரவை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கோரும்பிரகடனம்வெளியிடப்படுவதை தமிழக அரசு ஒத்தி வைத்துள்ளது;

மத்திய அரசை வற்புறுத்தும் இப் பிரகடனம் பற்றி வர்த்தக ஆலோசனைக் கமிட்டி தெரிவித்திருந்த சிபாரிசுக்கமைவாக இப் பிரகடனம் நேற்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது

எனினும் இத்தகைய பிரகடனம் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டுமெனக் கூறி தமிழக அரசு இப் பிரகடனத்தை நேற்று வெளியிடவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட தடை உத்தரவு மே 31-ம் திகதி காலாவதியாகும் முன்புதடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தது தெரிந்ததே.

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவு மேலும் நீடிக்க வேண்டுமென்று அ: இ.

அ.தி.மு.க உண்மையிலேயே விரும்பினால் தமிழக அரசாங்கமே அத்தகைய பொதுப் பிரகடனமொன்றை வெளியிடலாமே என்று காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அண்மையில் சவால் விட்டிருந்தார்.

இதற்கு ஏற்றாப் போல மாநில அரசு பிரகடனத்தை வெளியிட முயற்சித்தது எனினும் இறுதி நேரத்தில் இப் பிரகடனம்வெளியிடப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒரு இயக்கத்தின் மீது தடைவிதிக்கும் போதுஒருசில விதிமுறையை கடைப் பிடிக்க வேண்டியிருக்கிறது இவ்வாறு மத்திய அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் மாநில அரசின் விளக்க அறிக்கை ஒன்றை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தெரிவித்தார்

### பதுங்கியிருந்து

மணலாறு பிரதேசங்களில் அண்மையில் இராணுவத்தினர் இந்த சிறிகளவிலான செல்லைப் பாணியிலான தாக்குதல்களை அதிக இழப்புகளின்றி மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. படையினர் முகாம்களிலிருந்து சிறிது முன்னேறி பதுங்கிருந்து தாக்குதலை நடத்திவிட்டு திரும்புகின்றனர் எனக் குறிப்பிட்ட அப் பத்திரிகை இந் நடவடிக்கைகள் மூலம் படையினர் புதிய பாணியிலான இந் நடவடிக்கையிலேயே நாட்டம் கொண்டுள்ளதாக தெரிகிறது எனக் குறிப்பிட்டுள்ளது;

### ஐ. தே. க விற்கு

தார்

இதனைக் கேள்விப்பட்ட செல்லச்சாமி பித்தம் பிடித்தவர் போல அலறுவதாகவும் அவர் அக்கோட்டையில் அனுமதிக்கப் படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனதுகோரிக்கைகள்தொடர்பான ஒப்பந்தமொன்று விரைவில் கைச்சாத்திடப்படுமென்றும் இதன்பின்னர் ஐ. தே. க காங்கிரஸ் உறவு வலுவடையும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்;

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 04 19 - இரவு செவ்வாய்
08.01 ற்கு - அன்னைபூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தியாகத்தாய்'' இசைச் சித்திரம்
08.30 ற்கு- செய்திகள்
08.40 ற்கு- கருத்துக்களம்- ''திருகுதாளம்''

### அன்னை பூபதி

பாஸ்கரன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன்தியாகம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி ஆகியோர் நினைவுரையாற்றினர். இந் நிகழ்ச்சியில் கவிதை, கும்மி, கரகம், கோலாட்டம், மாவீரர் அஞ்சலி நிகழ்ச்சி ஆகியவை இடம் பெற்றன.

நேற்று இடம்பெற்ற உண்ணாவிரதத்தை யாழ் வட்டப் பொறுப்பாளர் திரு; செந்தமிழன் ஈகச் சுடரேற்றி அன்னைபூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார்; இவ் உண்ணாவிரத நிகழ்ச்சியில் அரசியல் துறையைச் சேர்ந்த திரு; நாச்சியார் மைந்தன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி இளவதனி ஆகியோர் நினைவுரையாற்றினர். இந் நிகழ்ச்சியில் கவிதை, பாட்டு, ஒளிவீச்சு ஆகியவையும் இடம்பெற்றன;

இரண்டு நாட்களும் இடம்பெற்ற உண்ணா விரதத்தில் தொழிற் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களும் பொது மக்களும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர்;

> யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்
> தினசரி 2, 30, 6 00
> சனி ஞாயிறு 10.30, 6 00
> **மதுரைவீரன்**
> சனி, ஞாயிறு 2. 30
> ஒளிவீச்சு
> (சி|9182)

### மீனவர் காயம்

குருநகர் கடல்பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

குருநகர்கடற்கரை வீதியை சேர்ந்தவினிஜினாஸ்யூலியன் வயது37) என்னும் மீனவரே காயமடைந்தவராவார்; (ஓ)

### யாழ். மாவட்டத்தில்

பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு தொகை அதிகரித்துள்ளமை தெரிய வந்துள்ளது (நி)

### கடற்படை

வர் சென்றபின் தாங்கள் மூவரும் கரையை நோக்கி நீந்திக் கொண்டிருந்தபோது சிறிது நேரத்தில் இறிலை காணவில்லையெனவும், பின்னர் தாங்கள் தேடிப் பார்த்துவிட்டு கரையை அடைந்ததாகவும் அவருக்கு என்ன நடந்ததென தெரியவில்லை என்றார்.

இச்சம்பவத்தின் போது காணாமல் போனவரை தேடும் பணியில் படகுகள் சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கி)

## 6ம் ஆண்டு நினைவு நாள்

# கொழும்பு பல்கலை உபவேந்தர் ராஜினாமா

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

திருமதி சிறிமாவோவின் அழைப்பை ஏற்று சுதந்திரக் கட்சியின் சார்பில் தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக தமதுபதவியை இராஜினாமா செய்திருப்பதாக இவர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்

இதே வேளைஇவர் கடந்த சில காலமாகவே அதிருப்தியுற்றவராக காணப்பட்டார் என்றும் அநுர பண்டாரநாயக்கா உயர் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து இவரது அதிருப்தி அதிகரித்ததாகவும் தெரியவருகிறது.

## 3 ஆம் ஆண்டு நினைவு மலர்



### லெப். கேணல் கிறேசி

[கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை]

19.04.1991 அன்று பரப்புக்கடந்தான் மண்ணை ஆக்கிரமிக்க வந்த எதிரியை விரட்டியடித்து வீரச்சா வெய்திய லெப். கேணல் கிறேசி.

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| **19.08.1960** | **19.04.1991** |

மண்ணின் விடுதலைக்காய் மானம் பெரிதென்று
எண்ணில் வீரர்களுள் ஒருவராய்ச் சென்று
அண்ணன் வழியில் ஆணையேற்று சென்றீர்கள்
எண்ணில் தெரியுது உந்தன் கனவுகளும் - இலட்சியமும்
மண்ணில் முளைக்குது மாவீர நினைவலைகள்
தமிழீழத் தாகம் கொண்டு சமர்க்களம் சென்றீர்கள்
தணியாத தாகத்துடன் சமரசடி விடுதலைக்கு
வித்தான வீரனே விடுதலையை
வென்றெடுப்போம் உம் வழியில்.

குடும்பத்தினர், சகோதரர்கள்,
மாமா, மாமி.

பொருக்கொளவேகுவேந்திரனே! போய்விட்டாய் ஈசன்
போதவிழும் மலர்ப்பாதம் கூடிடவேண் டிடுவோம்;
உன் பிரிவால் நடைப்பிணங்களான

சாத்துப்படி, மணலறை, சப்பறம்,
பந்தல் அமைப்பாளர்
88, அரசடிப்பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம். (8084))

பெற்றோர்,
உடன்பிறந்தோர்,
சுற்றத்தார்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:

1959-12-03

விண்ணில்:

1993-04-29

## கணபதிப்பிள்ளை குணம்

திதி: 1994-04-.9

பண்புடை மகனாய்ப் பிறந்தாய்
பாசமுடன் உனை வளர்த்தோம்
உத்தமனாய் வளர்ந்து உயர்ந்து வருநாளில்
மின்னாமல் முழங்காமல் வந்தவலி
பெற்றோர் உடன் பிறந்தோர்
பிள்ளைகளிடமிருந்து
சொல்லாமல் கொள்ளாமல் உனைப்பிரித்ததுவோ?
ஆண்டொன்று மட்டுமல்ல ஆண்டாண்டு சென்றாலும் உன் நினைவு மாறாது மறையாது!

உனையிழந்து தவிக்கும்,
பெற்றோர், உடன்பிறந்தோர்,
மனைவி, பிள்ளைகள்;

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்;
(8036)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

08.30 ற்கு- செய்திகள்
08.40 ற்கு- கருத்துக்களம்- ''திருகுதாளம்''
08.50 ற்கு- களமும் கானமும் ''ஏங்கும் விழிகள் சிரிக்கும்''
1994.04.20 -காலை புதன்
07.02 ற்கு- மாவீர வணக்கம்
07.15 ற்கு- நீங்கள் கேட்டவை
07.45 ற்கு- செய்திகள்
07.50 ற்கு- பத்திரிகைச் செய்திகள்
07.55 ற்கு- தாயகப்பாடல்;

# 6ம் ஆண்டு நினைவு நாள்

# அன்னை பூபதி

தமிழீழ மண்ணின் விடிவிற்காக தன் உயிரை தியாகம் செய்த அன்னை பூபதி அவர்களை தொழிலாளர்களாகிய நாங்கள் என்றென்றும்; நினைவு கூருகின்றோம்

தமிழ் மேசும் போக்கு வரத்து
ஊழியர் சங்கம்
மருந்தித்துறை சாலை

(89196)

## அன்னை பூபதி

உடுவில் கல்விக் கோட்டம்

ஆண்டு 8 - தர்சினி, ஜெயகுமார் யா - இராமநாதன் கல்லூரி
ஆண்டு 11 - வேலாயுதபிள்ளை சுதாஸ்கரன் யா - இணுவில் மத்திய கல்லூரி
ஆண்டு 11 - சிறீதேவி தெய்வேந்திரன் யா - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
ஆண்டு 12 - தேவராஜா தனலட்சுமி யா . இணுவில் மத்திய கல்லூரி
ஆண்டு 12 - சந்தானகிருஷ்ணன் சுபாங்கி யா , இணுவில் மத்திய கல்லூரி

கோப்பாய் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 - சுஜேந்தினி வல்லிபுரம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்
ஆண்டு 6 - சந்திரவதனி சாம்பசிவம் யா - அச்சுவேலி சரஸ்வதி வித்தி
ஆண்டு 6 - சிறி வதனி செல்லத்துரை ,, ,,
ஆண்டு 6 - ஆனந்தரூபி சிவலிங்கம் யா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி
ஆண்டு 6 - சுந்தரலிங்கம் தயாகரன் யா சிறுபிட்டி அ .. க பா
ஆண்டு 7 - நடராசா காண்டீபன் யா - பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
ஆண்டு 7 - மரின்சுஜாத்தா அன்ரனி இம்மானுவேல் யா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
ஆண்டு 8 - குமாரசாமி ஞானமூர்த்தி யா - வாதரவத்தை விக்னேஸ்வரா
ஆண்டு 8 - சுகந்தினி தனபாலசிங்கம் யா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி
ஆண்டு 9 - செல்லத்துரை சபேசன் யா - கோப்பாய் கிருத்தவக் கல்லூரி
ஆண்டு 9 - ராதிகா முருகதாஸ் யா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி
ஆண்டு 9 - செல்வரட்ணம் சிறிகாந்த் யா - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்
ஆண்டு 10 - வதவகீர்த்தனா மயில்வாகனம் யா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி
ஆண்டு 10 - வத்சலா பாலசுப்பிரமணியம் யா - சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி
ஆண்டு 10 - அனுராதா இராமநாதன் ,, ,,
ஆண்டு 11 - குணரத்தினம் லீலானந்தன் ,, ,,
ஆண்டு 11 - தெய்வேந்திரம் ஞானகுமரன் ,, ,,
ஆண்டு 12 - குமாரசாமி கிரிதரன் யா - இடைக்காடு ம.வி
ஆண்டு 12 - சுஜித்திரா நகுலேசபிள்ளை யா - உரும்பராய் இந்துக்கல்லூரி

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 - சமஜனிஸ்ரா இராசரத்தினம் யா - சண்டிலிப்பாய் இந்து தமிழ் வித்தி.
ஆண்டு 8 - தேவசேனாதிபதி சுகந்தன் யா - சண்டிலிப்பாய் இந்து தமிழ் வித்தி;
,, 8 - சுகிசா கந்தசாமி யா - பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்
ஆண்டு 11 - கணேசநாதன் சிறீகாந்தன் யா - இளவாலை சென்றியாசர் கல்லூரி
ஆண்டு 12 - ம; றெபேக்ஷாகி யா - இளவாலை புனித சென்றியாசர் கல்லூரி
,, 12 - தம்பித்துரை சந்திரகாந் யா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பா;

குடும்பத்தினர், சகோதரர்கள்,
மாமா, மாமி.

(8091)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கதிரவேலு

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், தற்போது மல்லாகியில் வசித்தவருமான வேலுப்பிள்ளை கதிரவேலு 18-04-94 அன்று மல்லாகியில் காலமாகி விட்டார்; இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரமகினம், கணேசபிள்ளை, சரோஜினிதேவி, அரியரட்ணம், சண்முகராசா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சரஸ்வதி, சிறீஸ் கந்தராசா, சிவஞானவல்லி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

இல; 44/2 மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்;

தகவல்
க. அரியரட்ணம்
(மகன்)

(8092)

## மாரிமுத்து பார்வதி

''செட்டிச்சோலை'' அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது உதவி அரசாங்க அதிபர் பணிமனை வீதி, சண்டிலிப்பாயில் வசித்து வந்தவரும் காலஞ்சென்ற மாரிமுத்து அவர்களின் அன்பு மனைவியுமான பார்வதி 18-04-94 அன்று காலமானார்: இவர் கந்தையா, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, நவரத்தினம், சிவராசா, இரட்ணராஜா, தனலட்சுமி, இராசலட்சுமி, செல்லநாயகம், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரா, சந்திரா, வதனா, சுஜன், சயூ, ராஜன், ஆனந்தன், றஞ்சி, அப்பன், சுபா, வத்சலா, மயூரன், செந்தூரன், மதூரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்; அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-94) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றேன்.

உ; அ; அ. பணிமனை வீதி,
சண்டிலிப்பாய்.
(8093)

தகவல்
ந. நல்லலிங்கம்
(மருமகன்)